DEPOSITION OF WITNESS

IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, THOOTHUKUDI.

MCOP No.18/2021

மனுதாரர் தரப்பு 4 வது சாட்சி வாக்குமூலம்

| | |
|---|---|
| Name | கோகுல்நாத் |
| Father's Name | த/பெ.துரைராஜ் |
| Village | |
| Taluk | |
| Religion | |
| Age | 33 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 01.10.2024

**மனுதாரர் தரப்பு முதல் விசாரணை:—**

நான் இந்த மனுவின் மனுதாரர் தரப்பு கூடுதல் சாட்சி. எனது முதல் விசாரணை சாட்சியத்திற்காக நிரூபணவாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதிலுள்ள கையெழுத்துக்கள் என்னுடையதுதான். அதில் உள்ள சங்கதிகளை படித்து பார்த்து கையொப்பங்கள் செய்துள்ளேன்.

**2 ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை:—**

1. நான் என்ன தொழில் செய்து வருகிறேன் என்றால் மகேஷ் டீ ஸ்டால் என்ற டீ கடை வைத்துள்ளேன். அந்த கடைக்கான உரிமம் பெற்றுள்ளேனா என்றால் பெற்றுள்ளேன். சம்பவம் நடந்ததாக நான் கூறும் பகுதி தூத்துக்குடியில் இருந்து திருச்செந்தூர் செல்லும் பிரதான சாலை என்றால் சரிதான். அது தென்வடல் சாலை என்றால் சரிதான். அந்த சாலையில் எந்த பக்கத்தில் நான் டீ கடை வைத்துள்ளேன் என்றால் மேற்படி ரோட்டிற்கு மேற்கு பக்கத்தில் வைத்துள்ளேன்.

2. மேற்படி விபத்து என்னுடைய கடைக்கு எதிர் திசையில் சாலையின் கிழக்கு பகுதியில் நடைபெற்றது என்றால் சரிதான். சாலையின் மத்தியில்

நடைபெற்றது. காயம் அடைந்த நபர் கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி சாலையை கடக்கும்போதுதான் விபத்து நடைபெற்றதாக எனது முதல் விசாரணை நிரூபண வாக்குமூலத்தில் குறிப்பிட்டு கூறியுள்ளேன் என்றால் சரிதான். அந்த நபர் வயது முதிர்ந்த நபர் என்றால் சரிதான். காயம் அடைந்த நபரின் சகோதரர்தான் புகார்கொடுத்தார் என்றால், நான் கொடுக்கவில்லை அதுபற்றி எனக்கு தெரியாது. எனது நிரூபண வாக்குமூலத்தில் நான் காயம் அடைந்த நபரை மருத்துவசிகிச்சைக்கு அழைத்து சென்றதாக குறிப்பிட்டிருந்தால் அது தவறு என்றால் சரிதான். நான் அழைத்து செல்லவில்லை. புகார்தாரர் தனது புகாரில் சந்திரன் மகன் சுஜித், தர்மதுரை மகன் பிரவின்குமார் என்பவர்களும், எனது சகோதரரை மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள் என்று கூறியுள்ளார்கள் என்றால் சரியல்ல.

3. காயம் அடைந்த நபரின் சகோதரர் அதாவது புகார்தாரர் ஜெயபிரகாஷ் எனக்கு தெரிந்த நபர் என்றால் தெரியாது. காயம் அடைந்த நபர்தான் என்னுடைய கடைக்கு வரும் வகையில் தெரியும். புகார்தாரர் அளித்த புகாரின் அடிப்படையில் நடந்த சம்பவத்தை நேரில் பார்த்தவர்கள் சுஜித் மற்றும் பிரவின் குமார் ஆகியோர்களுக்கு மட்டுமே தெரியும் என்றும், நான் சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை என்றால் சரியல்ல.

<u>**மறுவிசாரணை :–**</u>இல்லை

ஒம்/–P.V.வஷீத்குமார்,
**தலைமை நீதித்துறை நடுவர்,**
**தூத்துக்குடி.**